ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தெள்ளியீர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தெள்ளியீர் ॥

## திருக்கண்ணபுரம் - 2

‡தெள்ளியீர்! தேவர்க்கும்⋆ தேவர் திருத் தக்கீர்!⋆
வெள்ளியீர் வெய்ய⋆ விழு நிதி வண்ணர்⋆ ஓ!
துள்ளு நீர்க்⋆ கண்ணபுரம் தொழுதாள் இவள்
கள்வியோ⋆ கைவளை கொள்வது தக்கதே (1)

நீள் நிலா முற்றத்து⋆ நின்றிவள் நோக்கினாள்⋆
காணுமோ!⋆ கண்ணபுரம் என்று காட்டினாள்⋆
பாணனார் திண்ணம் இருக்க⋆ இனி இவள்
நாணுமோ⋆ நன்று நன்று நறையூரர்க்கே (2)

‡அருவி சோர் வேங்கடம்⋆ நீர்மலை என்று வாய்
வெருவினாள்⋆ மெய்யம் வினவி இருக்கின்றாள்⋆
பெருகு சீர்க்⋆ கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள்⋆ உள்மெலிந்தாள் இதென்கொலோ (3)

உண்ணும் நாள் இல்லை⋆ உறக்கமும் தான் இல்லை⋆
பெண்மையும் சால⋆ நிறைந்திலள் பேதை தான்⋆
கண்ணனூர் கண்ணபுரம்⋆ தொழும் கார்க் கடல்
வண்ணர்மேல்⋆ எண்ணம் இவட்கிதென்கொலோ (4)

கண்ணனூர்⋆ கண்ணபுரம் தொழும் காரிகை⋆
பெண்மையும் தன்னுடை⋆ உண்மை உரைக்கின்றாள்⋆
வெண்ணெயுண்டாப்புண்ட⋆ வண்ணம் விளம்பினாள்⋆
வண்ணமும்⋆ பொன் நிறம் ஆவதொழியுமே (5)

வட வரை நின்றும் வந்து⋆ இன்று கணபுரம்⋆
இடவகை கொள்வது⋆ யாம் என்று பேசினாள்⋆
மடவரல் மாதர் என் பேதை⋆ இவர்க்கிவள்
கடவதென்⋆ கண் துயில் இன்று⋆ இவர் கொள்ளவே (6)

தரங்க நீர் பேசினும்⋆ தண் மதி காயினும்⋆
இரங்குமோ⋆ எத்தனை நாள் இருந்தெள்கினாள்⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான்⋆ அது தொன்மை ஊர்⋆
அரங்கமே என்பது⋆ இவள் தனக்காசையே (7)

தொண்டெல்லாம் நின்னடியே⋆ தொழுதுய்யுமா
கண்டு⋆ தான் கணபுரம்⋆ கை தொழப் போயினாள்⋆
வண்டுலாம் கோதை என் பேதை⋆ மணி நிறம்
கொண்டு தான்⋆ கோயின்மை செய்வது தக்கதே (8)

முள்ளெயிறேய்ந்தில⋆ கூழை முடிகொடா⋆
தெள்ளியள் என்பதோர்⋆ தேசிலள் என் செய்கேன்⋆
கள்ளவிழ் சோலைக்⋆ கணபுரம் கை தொழும்
பிள்ளையை⋆ பிள்ளை என்றெண்ணப் பெறுவரே (9)

‡கார்மலி⋆ கண்ணபுரத்தெம் அடிகளை⋆
பார் மலி மங்கையர் கோன்⋆ பரகாலன் சொல்⋆
சீர் மலி பாடல்⋆ இவை பத்தும் வல்லவர்⋆
நீர் மலி வையத்து⋆ நீடு நிற்பார்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥